காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் புனிததோமையார்மலை வடக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சுனில்மேத்யு தலைமையில், துணை அமைப்பாளர் ஆர். பாஸ்கர் வரவேற்பில் கவுல்பஜாரில் மாபெரும் தெருமுனை கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், கவிஞர் தமிழ் தாசன், ஸ்ரீலேகா சிறப்புரையாற்றினர். இதில் ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், இளங்கோவன், மோகன், மனோகரன், ஜி.கே.வி. பிரபாகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பூர் வடக்கு பகுதி 35 வது வட்டம் டீச்சர்ஸ் நகர் பகுதியில் பாகம் எண் 32 இல் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் பணியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஈடுபட்டார். உடன் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன், செந்தூர்பாண்டியன் உமாஜான், வட்டக் கழக நிர்வாகிகள், BLA2 BDA,BLC மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

சைதாப்பேட்டை – தாடண்டர் நகர் அரசு குடியிருப்புப் பகுதிகளில்

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தூய்மைப் பணி!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 14-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு 169, தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் நேற்று முதல் (13.07.2025) தூய்மைப் பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, வார்டு 169, தாடண்டர் நகர் அரசு குடியிருப்பு பகுதி, 70.73 ஏக்கர் பரப்பளவு உள்ளடக்கியதாகும். இங்குள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை சுமார் 1844 என கணக்கிடப்பட்டுள்ளது மேலும் 1500 குடியிருப்புகள் வரவுள்ளன. இவ்வளாகத்தில் தூய்மைப் பணி மற்றும் இதர பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்குடியிருப்பு வளாகம், பூங்கா, விளையாட்டுத் திடல், சமுதாய கூடம், பள்ளி கட்டிடம், மருத்துவமணை, கடைகள் மற்றும் அரசு அலுவலகங்களில் தூய்மைப் பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததால் இப்பகுதியில் சுகாதார மேம்பாட்டிற்காக மாண்புமிகு துணை மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பொதுப்பணித்துறையிடம் ஒப்புதல் பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியே அர்பேசர் சுமித் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன்படி தாடண்டர் நகர் அரசு குடியிருப்புப் பகுதியில் உள்ள 5440 மீட்டர் நீளம் கொண்ட சாலைகள் மற்றும் இவ்வளாகத்திலுள்ள அனைத்து கட்டிடங்களில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

26 தூய்மைப் பணியாளர்கள், 14 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு காம்பாக்டர் வாகனம், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 46 குப்பைத் தொட்டிகள், 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 சுழற்சித் தொட்டிகள் (Rotomac Bin), 2 சூப்பர்வைசர்கள், ஒரு கனரக வாகன ஓட்டுநர், 2 கனரக வாகன உதவியாளர்கள் இப்பணிக்காகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் துணை மேயர் மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, உர்பேசர் தலைமை செயல் அலுவலர் முகமது சையத் மற்றும் அலுவலர்கள் குடியிருப்புப் பகுதி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மோரை கோ.தயாளன் தலைமை! ஆர்.டி.மதன்குமார் முன்னிலை!

வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் சிறப்புரை!

சென்னை,ஜூலை.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் டாக்டர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா, திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் மாதவரம் தொகுதி பாலவேடு ஊராட்சி, விவாகா மஹால் அருகில் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் மோரை கோ.தயாளன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி. மதன்குமார், மற்றும் மோரை மு.சதீஷ்குமார் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் தே.இளம்பரிதி, துணை அமைப்பாளர்கள் வெ.ஹரிகிருஷ்ணன் (எ) ஸ்டீபன், சௌ.சதிஷ், ஆ.கண்ணன், எ.பி. இளங்கோவன், இரா.கவியரசன், வே.கார்த்திக் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர் மு.சதீஷ்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கே.ரவிக்குமார், ஒன்றிய பொருளாளர் அ.சிவானந்தம், இரா.குணசேகரன், மு.க.ஸ்டாலின், ஜெ.ராஜேந்திரன், ஜெ.வாசன், இரா. கிருஷ்ணமூர்த்தி, க.ராஜ்குமார், வெ.ஜெயக்குமார், கே.பாபு, சி.ராஜசேகரன், ஏ.சத்தியமூர்த்தி, பி. மோகன், உமா கோபால், ஆ.ராமு, சந்திரன், வி.தயாளன், ஜி.சதீஷ், பா.பொன்முடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம், கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திரபதி, இளம் பேச்சாளர் சாய் நித்திக் சக்திவேல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு டாக்டர் கலைஞர் ஆட்சி செய்த சாதனைகளையும் திராவிட மாடல் ஆட்சி நான்காண்டு சாதனைகளையும் விளக்கி சிறப்புரையாற்றினர்.

மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் பொ.ஏழுமலை, ஒன்றிய துணைச் செயலாளர்கள் குணா தயாநிதி, ஏ. ராமதாஸ், மாவட்ட பிரதிநிதி வி.பி. அண்ணாதுரை, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சி.கோவிந்தராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ப.திருநாவுக்கரசு, வேதா செந்தில், மோரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஆர். திவாகரன்,

ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மோகன். சூரிய பிரகாஷ், அரசகுமார். புனிதவேல் ஓசிஎப் ராஜேந்திரன் சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அஜீலன் பாட்ஷா, முகம்மது அன்சாரி, முகம்மது லத்தீப் ராஜ, முகமது தாவூத் உசேன், மா.பரிமளம், ம. சுரேஷ்

அணிகளின் நிர்வாகிகள் சி.சௌந்தர்யா, வே.ஓம் பிரகாஷ், மு.ஸ்டா லின், ஓம்.பாலஜி,திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் மணலி எஸ். ஸ்டாலின், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணிகண்டன், ஆர்.எம்.மணிகண்டன், ஆர்.ரூபேஷ் மற்றும் த.க.சிவசூரியா, ஹரிஷ், கே.விக்கி,ஐசக், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில்

ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 14-

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லறிக்கை, காடூர், புது வேட்டைக்குடி, கைப்பெரம்பலூர், கி.குடிக்காடு, பழைய அரசமங்கலம், வடக்கலூர், காருகுடி, சின்னபரவாய், எழுமூர், பீல்வாடி, சித்தளி ஆகிய கிராமங்களில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்ட ப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்தாவது:-

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் கனிமங்கள் மற்றும் சுரங்க நிதியின் கீழ் காடூர், புதுவேட்டைக்குடி, வடக்கலூர் ஆகிய இடங்களில் தலா ரூ.9.15 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நல்லறிக்கை முதல் இலுப்பையூர் வரை ரூ.99.90 லட்சம் மதிப்பீட்டிலும், நல்லறிக்கை முதல் புதுக்குடிசை வரை ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலும், புதுவேட்டைக்குடி - பென்னகோணம் சாலை முதல் கீழக்குடிக்காடு வரை ரூ.92.80 லட்சம் மதிப்பீட்டிலும், கிழுமத்தூர் குடிக்காடு முதல் கைப்பெரம்பலூர் வரை ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்படுத்தும் பணியினையும், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுவேட்டைக்குடியில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் 470 மீட்டர் தூரமுள்ள ஆதிதிராவிடர் மயான சாலையினை மேம்படுத்தும் பணியினையும், காருகுடி ஆதிதிராவிடர் தெருவில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சித்தளி ஊராட்சியில் பீல்வாடி முதல் ஆதிதிராவிடர் மயானம் வரை ரூ.16.10 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினையும்,15வது நிதிக் குழு மானியத்தின் மூலம் காருகுடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி பொதுநிதியின் கீழ் புது வேட்டைக்குடி ஊராட்சி மாரியம்மன் கோவில் முதல் ஆதிதிராவிடர் தெரு வரை ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் பைப்லைன் அமைக்கும் பணி, கைப்பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்கும் பணியினையும், கிழுமத்தூர் குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிவறை அமைக்கும் பணியினையும், பழைய அரசமங்களத்தில் 80 குடும்பங்களுக்கு பைப்லைன் மற்றும் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சின்னபரவாய் கிராமத்தில் செங்கமலை வீடு முதல் சின்னப் பொண்ணு வீடு வரை ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் மற்றும் கவர் ஸ்லாப் அமைக்கும் பணியினையும், எழுமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை அமைக்கும் பணியினையும்,

பீல்வாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் பெண்கள் மற்றும் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி பிசி மயான பாதையை ரூ.16.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலையாக மேம்படுத்தும் பணியினையும், சித்தளி ஊராட்சி நடுத்தெருவில் சுதா வீடு முதல் மாலதி வீடு வரை ரூ.6.15 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும் குன்னம் பேருந்து பணிமனைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திடும் விதமாக ஊராட்சி பொது நிதியில் ரூ.6.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய பைப் லைன் மற்றும் தரைத் தளம் நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கு பேருந்து பணிமனையில் அடிக்கல் நாட்டினார்.

இதில்,மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திருமதி.மரகதவல்லி குன்னம் துணை மேலாளர் சுரேஷ் பார்த்திபன், கிளை மேலாளர்கள் எட்வர்ட் கென்னடி, குணசேகரன், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி 171 அ வட்டக்கழகத்தில் விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் எஸ்.பாலமுருகன் ஏற்பாட்டில் பள்ளி குழந்தைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டது மயிலை சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த .வேலு வழங்கினார். உடன் பகுதி செயலாளர் எஸ்.முரளி வட்டசெயலாளர் பா.பொன்னுசாமி மாமன்ற உறுப்பினர் கீதா முரளி வட்டசெயலாளர்கள் மா.பா.அன்பு. வி.வெற்றிவேல் கோ.கண்ணன் வட்டதுணைச்செயலாளர் சந்திரசேகரன் விளையாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சி.ஐ.டி நகர் ஆர்.குமரன் ப.பிரகாஷ் மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டுமற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் அணியின் துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எம் விக்னேஷ் மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை கழக பேச்சாளர் தமிழ் சாதிக் இளம் பேச்சாளர் தி.கோகுல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பகுதிச் செயலாளர் என். சந்திரன் எம்.சி., ப. குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், எம்.எஸ்.கே. இப்ராஹிம் இ.உலகநாதன், கலாநிதி குருநாதன், எஸ். வினோத், பி. சந்திரசேகர், கே. விஜயபாபு, அஜித், ப. சீனிவாசன், ஏ. பாலச்சந்தர், கா கதிரவன், எம்.ஜி. சதீஷ், எம். சரவணன், வினோத், பி.தினேஷ், கார்த்தி, எஸ்.ரம்யா, கே.கங்காதரன், டி.ராஜி, பி.ஆர்.சுரேஷ், எஸ்.நாகவள்ளி, கே.சுகுமாறன், ஜெ.செல்வராஜ், ஆர்.மதிவாணன், எஸ்.சிவசங்கர், எஸ்.சேகர், எஸ்.சம்பத்குமார், ஆலந்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் ஜி.சுந்தர்ராஜன் ஆர்.பாபு ஏ.சாலமோன், கே.ராஜேஸ்வரிசத்யா இ.ரமேஷ் ஆலந்தூர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஜெ.நடராஜன், டி.ஜேசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், ஏ.ஆர்.சரவணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு அணி சார்பில் கலைஞர் பிறந்த நாள் விழா!

பெரம்பலூர், ஜூலை 14 -

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம் தலைமையில், முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி தி.மு.க. மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு முன்னாள் முதல்வர் கலைஞரின் அளப்பரிய செயல்கள் குறித்து பேசினர். அதனைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு பொருட்கள் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் விளையாட்டு அணி பொறுப்பாளர்கள், பள்ளி விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருத்தணி நகர திமுக சார்பில் 9, 10, ஆகிய வார்டுகளில் நகரச் செயலாளர் வி.வினோத் குமார் ஏற்பாட்டில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வீடு வீடாக சென்று, கழக ஆட்சியின் சிறப்பு திட்டங்களை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபட்டார்கள் அருகில் ஜி.எஸ்.கணேசன் , டி.எஸ்.ஷியாம் சுந்தர், கே.எஸ்.அசோக்குமார் நிர்வாகிகள் எஸ்.குமரன் , சித்திக் அலி, வேணுகுமார், எம்.கார்த்திகேயன். கவுன்சிலர் மகேஸ்வரிகமலக்கண்ணன், சதீஷ்குமார் , ஆர்.விஜயகுமாரி. கிருஷ்ணமூர்த்தி கே.விக்னேஸ்வரன். பூச்சாண்டி, வெங்கடேசன், சண்முகம், பழனி, மோனிஷ், கிஷோர், லோகேஷ், மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.